2011 ஜனவரி 10]

மாவட்டங்களில் உள்ள பகுதிகளுக்கு நேரடியாகப் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில், சென்னையிலே கிட்டத்தட்ட 2,000 பேருந்துகள் இருந்தன, இப்போது 3,000 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பணிமனையிலும் பேருந்துகள் வெளியிலேதான் நிற்கக்கூடிய அளவிற்கு இட நெருக்கடி இருக்கிறது. எனவே, பணிமனைகளை வெளியிலே கொண்டு செல்வதற்குரிய ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்கெங்கே இடம் கிடைக்குமோ அங்கெல்லாம் பணிமனைகளைக் கொண்டு செல்வதற்கு இப்போது ஆய்வு நடந்து கொண்டிருக்கின்றது. திருப்போரூர் தொகுதியிலே பணிமனை அவசியம் தேவை என்று கருதி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் பெற்றுத் தருவார்களேயானால் பணிமனை அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

நடமாடும் மருத்துவமனைகள்

***17688—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகரங்கள், முக்கிய நகரங்களில் நடமாடும் மருத்துவமனைகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொலைதூரத்தில் வசிக்கும் மக்கள், எளிதில் சென்றடைய முடியாத கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் மற்றும் மலைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு தக்க மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் தமிழ்நாட்டில்

வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களை மையமாகக் கொண்டு நடமாடும் மருத்துவக் குழு அமைக்க அரசு திட்டமிட்டது. அதன் அடிப்படையில் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் நடமாடும் மருத்துவமனைகளில் சில மருத்துவமனைகள் சரியாகச் செயல்படவில்லை. அவற்றில் டாக்டர்களை நியமித்திருக்கிறார்கள். ஆனால், டாக்டர்களில் சிலர் நடமாடும் மருத்துவமனைகளுக்குச் செல்வதில்லை. தமிழ்நாட்டில் இப்போது 108 ஆம்புலன்ஸ் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. உயிர்ச் சேதங்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன. அத்திட்டத்திற்கு மக்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பு ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில்கூட, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள், தமிழ்நாட்டில் தொடர்ந்து விபத்துகள் ஏற்படுவதாகவும், அதற்குத் தன்னுடைய வருத்தத்தையும், கவலையையும் தெரிவித்தார்கள். ஆகவே, தொடர்ந்து தமிழ்நாட்டில் தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் 108 ஆம்புலன்ஸ் திட்டத்தைப் போலவே, நடமாடும் மருத்துவமனைகளையும் விரிவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் பொது சுகாதாரத் துறையின்மூலமாக 385 நடமாடும் மருத்துவக் குழுக்களும், மருத்துவ மற்றும் ஊரக நலத் துறையின்மூலமாக 10 நடமாடும் மருத்துவக் குழுக்களும், தனியார் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மலைவாழ் மக்களின் நலன் கருதி 10 மாவட்டங்களில் 12 நடமாடும் மருத்துவக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. அனைத்து மருத்துவக் குழுக்களிலும் மருத்துவர்களும், செவிலியர்களும், உதவியாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவர்கள் சில நேரங்களில் மாறுதல் வாங்கிக் கொண்டு

2011 ஜனவரி 10]

செல்கின்றபோது, அந்த இடங்களை நாங்கள் கண்டறிந்து, பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றோம். இதுவரையில் கிட்டத்தட்ட 39 தடவை நேர்காணலுக்கு மருத்துவர்களை அழைத்து, பணி நியமனம் செய்து கொண்டிருக்கின்றோம். படிப்படியாக, ஓய்வு பெறும் காலியிடங்களையும், அவ்வப்போது ஏற்படுகின்ற காலிப் பணியிடங்களையும் நாங்கள் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம். மேலும் சில மலைப்பகுதி மாவட்டங்களில் மருத்துவர்கள் அங்கே சேர்வதில்லை என்ற காரணத்தால், பொதுவான அறிவிப்பு ஒன்று விளம்பரம் செய்யப்பட்டு, சிறப்பு அனுமதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மலைப் பகுதிகளில், குறிப்பாக திருவாரூர், நாகை மாவட்டங்களில் மருத்துவர்கள் இல்லாத காரணத்தால், அங்கே யார் விண்ணப்பித்தாலும், அந்தப் பகுதிகளிலே மூன்று ஆண்டு காலம் தொடர்ச்சியாகப் பணிபுரிவதற்கு இப்போது சிறப்பு ஆணையை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாங்கள் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றோம்.

முற்பகல் 10-05

மேலும், இப்பொழுது 108 அவசர ஆம்புலன்ஸ் இயக்கப்படுகிறது. இது குறிப்பிட்ட மாவட்டம் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட 385 வட்டாரங்களில் இத்தகைய 108 ஆம்புலன்ஸ்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இது மக்கள் மத்தியிலே சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது. இன்னும் சொல்லப்போனால் அழைத்த 15 நிமிடங்களுக்குள் இது குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று நோயாளிகளை அழைத்துச் செல்கின்ற ஒரு நிலையைப் பெற்றுள்ளது. இன்னும் நேரத்தைக் குறைக்க வேண்டுமென்று கருதி, மாண்புமிகு முதல்வர் அவர்களால் 260 வண்டிகள் வாங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டு, இப்பொழுது ஒப்பந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏப்ரல் மாதத்தில் 260 ஆம்புலன்ஸ்களும் இயங்கத் தொடங்கும்போது அழைத்த 5 நிமிடங்களில் நோயாளிகளை அழைத்துச் செல்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல 108 ஆம்புலன்ஸ் திட்டம் துவங்கப்பட்டு இதுவரையிலே கிட்டத்தட்ட 7 இலட்சத்து 76 ஆயிரத்து 49 நபர்கள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயனடைந்து மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களில் படுகாயமுற்றவர்கள் 2 இலட்சத்து 26 ஆயிரத்து 682 நபர்கள்

இதன்மூலம் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். பிரசவத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆம்புலன்ஸ் மூலமாக நேற்றுவரையில் கிட்டத்தட்ட 2 இலட்சத்து 2 ஆயிரத்து 36 பேர்கள் பிரசவத்திற்காக அழைத்து வரப்பட்டு பயன்பெற்றிருக்கிறார்கள். அதேபோல இருதயம் பாதிக்கப்பட்டவர்கள் 42 ஆயிரத்து 117 நபர்கள் இதன்மூலம் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். விஷம் அருந்தியவர்கள் 30 ஆயிரத்து 584 நபர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. தற்கொலைக்கு முயற்சி செய்தவர்கள் 3 ஆயிரத்து 395 நபர்கள் இந்த ஆம்புலன்ஸ் மூலமாகப் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். கிராமப் பகுதிகளிலே எங்கு, யாரைக் கேட்டாலும், வயதானவர்களைக் கேட்டாலும், குழந்தைகளைக் கேட்டாலும் அவர்கள் 108 ஆம்புலன்சினுடைய பெருமைகளை, தலைவர் கலைஞர் அவர்களுடைய பெருமைகளை வாழ்த்திப் பேசுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய சூழ்நிலையில், தமிழகத்திலே மாவட்ட மருத்துவமனைகள், மாவட்ட, கிராம, குக்கிராம, நகரப் பகுதிகள் இத்தகைய 108 ஆம்புலன்ஸ் வசதியைப் பெறுகின்ற காரணத்தால் மொபைல் மருத்துவமனைகள் தேவையில்லை. இருந்தாலும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல 108 ஆம்புலன்ஸ் மூலமாக உயிர்கள் காப்பாற்றப்படுவதை நானே நேரடியாகக் கண்டறிந்தேன். 108 ஆம்புலன்ஸ் மிகவும் வரவேற்கக்கூடியது. பல்லாயிரக்கணக்கான உயிர்ச்சேதங்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்கின்ற செய்தியெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த முன்வருவார்களா என்று கேட்பதுடன், தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்றன. என்னுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், 108 ஆம்புலன்ஸ் போலவே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கை நடமாடும் மருத்துவமனை பற்றியது, அதை மாத்திரம் கேளுங்கள்.

2011 ஜனவரி 10]

திரு. கோவை தங்கம்: 108 ஆம்புலன்ஸ் போலவே தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் நடமாடும் மருத்துவமனைகள் செயல்பட்டால் இன்னும் உயிர்கள் காப்பாற்றப்படலாம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்கள், அரசு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலமாக இன்று ஏராளமான உயிர்களைக் காப்பாற்றுவதைப்போல, 108 ஆம்புலன்ஸ் ஏராளமான உயிர்களைக் காப்பாற்றுவதைப்போல, இந்த நடமாடும் மருத்துவமனைகளையும் விரிவுபடுத்தி, தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் நடமாடும் மருத்துவமனைகளை செயல்படுத்த முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் மருத்துவமனை, மாவட்டங்களிலும் நகரப் பகுதிகளிலும் தேவையில்லை. ஏனென்றால், அங்கே மருத்துவமனைகள் அதிகம் இருக்கின்ற காரணத்தால் இருக்கிற மருத்துவமனை வசதிகளையே மக்கள் பயன்படுத்திக்கொள்வார்கள். மருத்துவமனைகள் அருகில் இல்லாத கிராமங்களிலும், மலைப் பகுதிகளிலும்தான் நடமாடும் மருத்துவமனைக் குழுக்கள் தேவை. அந்த அடிப்படையில்தான் 385 நடமாடும் மருத்துவ முகாம்கள் கிராமப் பகுதிகளிலே, துவங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் போதிய மருத்துவர்கள் இருக்கிறார்கள். அதேபோல, மாவட்ட மருத்துவமனைகள். மாவட்டத் தலைநகரங்களில் 108 ஆம்புலன்ஸ் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதேபோல கலைஞர் காப்பீட்டுத் திட்டம். இதன்மூலம் மக்கள் அருகில் இருக்கின்ற அரசு, தனியார் மருத்துவமனைகளிலும் தங்களுடைய மருத்துவ வசதிகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இதுவரையிலும், கிட்டத்தட்ட 2,56,947 நபர்கள் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக உரிய அறுவை சிகிச்சைகள் செய்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

[2011 ஜனவரி 10

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திற்குட்பட்ட மேட்டூர் அரசு மருத்துவமனை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு பல ஆண்டு காலமாகிறது. ஆனால், ஒரு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், போதுமான மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்கள் இருக்கிறார்களா என்றால் இல்லை. அங்கு வரக்கூடிய உள் நோயாளிகள், புற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. பெருகிவரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கையில் 11 மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதிலே சிறப்பு மருத்துவர் உட்பட இன்னும் மற்ற பணியாளர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களையெல்லாம் எடுத்துக்கொண்டால், 46 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. கட்டுமானப் பணிகள், அடிப்படை வசதிகள் எல்லாம் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தால், மிக வேகமாக அந்தக் காலிப் பணியிடங்களையெல்லாம் நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதைப்போல மிகப் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற சத்தியா நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தினமும் பிரசவம் அதிகமாக நடைபெறுகிறது. தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், அதிகமாக பிரசவங்கள் நடைபெறுகிற ஆரம்ப சுகாதார நிலையம் சேலம் மாவட்டத்திலுள்ள சத்தியா நகர் ஆரம்ப சுகாதார நிலையம். ஆகையினால், அதை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. அதைப்போல, சந்தைதானம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம். இந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 30 படுக்கைகள் கொண்ட, 24 மணி நேரம் செயல்படக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான மேட்டூர் மாவட்டத் தலைமை

2011 ஜனவரி 10]

மருத்துவமனை புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, அங்கு போதிய கட்டட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, கடந்த ஆண்டு கிட்டத்தட்ட 30 படுக்கைகள் கொண்ட, ஒரு கோடி ரூபாய்க்கு மேலுள்ள அந்தப் புதிய கட்டடத்தை நானும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் திறந்து வைத்தோம். தேவை அறிந்து அந்த மருத்துவமனைக்கான வசதிகளை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அங்கு பொதுப் பணித் துறையிடம் தெரிவித்து, நெடுங்காலமாக இருக்கின்ற பழைய கட்டடங்களை இடித்து அகற்றிவிட்டு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதைப்போல, மாவட்ட மருத்துவமனைக்குத் தேவையான சிறப்பு மருத்துவர்களை நியமித்திருக்கிறோம். பணியிடங்களைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட 5, 6 பணியிடங்கள்தான் காலியாக இருக்கும். நாங்கள் பணியாளர்களை நியமனம் செய்கிறோம். அவர்கள் ஓராண்டுகாலம் பணிபுரிந்துவிட்டு உடனடியாக கவுன்சிலிங்மூலம் வேறு இடத்திற்கு மாறுதல் பெற்றுச் சென்றுவிடுகிறார்கள். மீண்டும் நாங்கள் பணி நியமனம் செய்கிறோம். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கிட்டத்தட்ட 6,722 மருத்துவர்களை நாங்கள் நியமனம் செய்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையிலே நாங்கள் தேவையான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தத் துறையை கிட்டத்தட்ட 5, 6 தடவை மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரடியாக ஆய்வு செய்திருக்கிறார்கள். அதைப்போல, கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கிட்டத்தட்ட 1,060 கோடி ரூபாய்க்கு மருத்துவமனைக் கட்டடங்கள் தமிழகம் முழுவதும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இது தெரியும். நேரடியாகப் பார்த்து எல்லோரும் பாராட்டக்கூடிய அளவுக்கு, தனியாருக்கு நிகரான மருத்துவமனைகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல, கிட்டத்தட்ட ரூ.680 கோடிக்கு கருவிகளும் வாங்கப்பட்டிருக்கின்றன.

இங்கு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது மத்திய அரசு ஒரு விதி வைத்திருக்கிறது. வட்டார மருத்துவமனைகளில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளை வசதி இல்லாத வட்டாரங்களில்தான் தோற்றுவிக்க வேண்டுமென்று மத்திய அரசு

ஒரு கருத்துத் தெரிவித்திருக்கின்ற காரணத்தால், அந்த விதிக்கு உட்பட்டிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

நேற்றுமுன்தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிய ஆரம்ப சுகாதார நிலையம், கிட்டத்தட்ட 50 மருத்துவமனைகளும், 30 படுக்கைகள் கொண்ட 40 கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசே பாராட்டுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களே பாராட்டுகின்ற அளவுக்கு இந்தத் துறை நல்ல முறையில் இயங்கி வருகிறது. மக்களிடத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். கம்யூனிஸ்டு கட்சியை எடுத்துக்கொண்டால், மன்னார்குடியில் மாவட்ட மருத்துவமனை வேண்டுமென்பது திரு. சிவபுண்ணியம் அவர்களுடைய கோரிக்கை. அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆதரவுக் கட்சியாக இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் அந்த மாவட்ட மருத்துவமனையை மன்னார்குடிக்குக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். கட்சி வேறுபாடில்லாமல் செய்கிறார்கள். நீங்களும் கட்சி வேறுபாடில்லாமல் பாராட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கமலக்கண்ணன்.

முற்பகல் 10-15

திரு. ஜெ. கமலக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட வந்தவாசி ஒன்றியம், கீழ்க்கொடுங்கலூரைச் சுற்றி 20 கிராமங்கள் இருக்கின்றன. அவற்றில் சுமார் ஏழாயிரம் மக்கள் வசிக்கின்றார்கள். இக்கிராம மக்கள் வந்தவாசி சென்று சிகிச்சை பெற வேண்டுமென்றால் சுமார் 15 கி.மீ. தூரம் செல்ல வேண்டியுள்ளது. மருவத்தூருக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டுமென்றால் சுமார் 15 கி.மீ. தொலைவு செல்ல வேண்டியுள்ளது. எங்கள் கிராம மக்கள் சிகிச்சை பெறுவதற்கு வசதியாக புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 10]

அமைத்திட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு சுமார் 166 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதியளித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அதில் இருக்கிறதா என்று தெரியவில்லை. நிச்சயமாக அதில் இருக்கும் என்று நினைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கு. ஹசன் அலி.

திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புத்தாண்டில் உங்கள் அனைவருக்கும் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக, 108 எண் கொண்ட ஆம்புலன்சின் சேவையைப் பற்றி பேசும்போது நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்னாலே நான் குடும்பத்தோடு பயணம் செய்யும்போது விபத்தில் சிக்கிக்கொண்டேன். இந்த 108 எண் கொண்ட ஆம்புலன்ஸ்தான் என்னுடைய குடும்பத்தாரரின் உயிரைக் காப்பாற்றியது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நாங்கள் அதற்காக நன்றியோடு இருப்போம்.

என்னுடைய இராமநாதபுரம் தொகுதியிலே, இராமேஸ்வரம், புதுமடம் போன்ற பகுதிகளில் மருத்துவ வசதிகள் இதுவரை சரியாகச் செய்து தரப்படவில்லை. ஆனாலும், கனிவோடு கலைஞர் அவர்கள் எங்களுடைய இராமநாதபுரத்திற்கு மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வந்ததற்காக நாங்கள் எல்லோரும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். நாங்கள் உள்ள வரை, இராமநாதபுரம் உள்ள வரை அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். இராமநாதபுரத்திலே, குறிப்பாக இராமேஸ்வரத்திற்கு வெளிநாட்டுப் பயணிகளும், மற்ற சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக வருவதால் அங்கு மருத்துவ வசதி போதுமான அளவிற்கு இல்லை. மாதா அமிர்தானந்தமயி

[2011 ஜனவரி 10

அவர்களால் கட்டப்பட்டு, நம்முடைய ஜனாதிபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மருத்துவ வசதி கொண்ட ஒரு கூடம் இதுவரை அங்கு செயல்படாமல் இருக்கிறது. ஆகவே, இவற்றை எல்லாம் கவனிக்க வேண்டும். கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே இராமநாதபுரத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை கொண்டு வந்தபோது நாங்கள் எந்த அளவிற்கு மகிழ்ச்சியடைந்தோமோ, அதே மகிழ்ச்சியினை, அதே இன்பத்தினை அவர்கள் இராமநாதபுரத்திற்கு மருத்துவக் கல்லூரியினை கொண்டு வந்ததற்காகவும் அடைகிறோம். அதற்காக நன்றியைக் கூறி, உங்கள் அனைவருக்கும் சாந்தியும் சமாதானமும் உண்டாக வேண்டுமென்று கூறி அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றியைத்தான் தெரிவித்திருக்கின்றார். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரங்களிலே, குறிப்பாக மக்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கும் இடங்களில் நடமாடும் உடல் பரிசோதனை மையங்களை அமைக்க வேண்டும். எல்லோரும் அடிக்கடி sugar மற்றும் B.P. பார்க்க வேண்டுமென்றால் நேரம் இல்லாத காரணத்தால் அதைப் பார்க்க முடியவில்லை. ஆகவே, நடமாடும் உடல் பரிசோதனை மையங்களை அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் ஆலோசனையைக் கூறியிருக்கின்றார்கள். அது குறித்து எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும். "நலமான தமிழகம்" என்ற திட்டத்தினை கடந்த மாதம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதன்படி தமிழகம் முழுவதும் உள்ள கிராமங்களுக்கு மருத்துவக் குழுக்கள் சென்று, மக்களை வீடு வீடாகச் சந்தித்து அவர்களுக்கு மருத்துவ சோதனை செய்து, யார் யாருக்கு சர்க்கரை மற்றும் இரத்தக் கொதிப்பு நோய் இருக்கின்றது என்பதைக் கண்டறியும் பணி நடந்து கொண்டிருக்கின்றது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும்

அதிலே கலந்துகொண்டு அது குறித்து மக்களுக்கும் தெரியப்படுத்தியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு சர்க்கரை மற்றும் இரத்தக் கொதிப்பு நோய் இருக்கிறதா என்பதைக் கண்டறியவும் "நலமான தமிழகம்" என்ற திட்டத்தின்மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்தில் இதுவரை 10 சதவிகித மக்களுக்கு கிராமப்புறத்தில் சர்க்கரை நோய் இருக்கிறது என்று கண்டறிந்திருக்கின்றார்கள். மேல்சிகிச்சை மற்றும் உரிய சிகிச்சை அவர்களுக்கு அளிப்பதற்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வசதி செய்யப்பட்டிருக்கின்றது என்கிற செய்தியைத் தெரிவித்துக்கொள்வதுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பிற்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

கொள்முதல் மையம்

***120114—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சிக்கு உட்பட்ட களம்பூர் அல்லது அத்திமூரில் நேரடி கொள்முதல் மையம் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2009-2010 ஆம் ஆண்டு நெல் கொள்முதல் பருவத்தில், 22-4-2010 அன்று அத்திமூர் பகுதியிலே ஒரு நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. திறக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் முன்பணமும் கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று அரசின் சார்பாகச் சொல்லப்பட்டாலும்கூட, அங்கே சரியான முறையிலே நெல் அறுவடை இல்லாத காரணத்தினால் 11-11-2010